உ

கடவுள் துணை.

மானிடக்குறியென்றும்
திரேகக்குறி-புருஷலட்சணமென்றும்
வழங்கிய

அங்கக்குறிசாஸ்திரம்.

இஃது.

ம-ா-ா-ஸ்ரீ சிறுமணவூர்

முனிசாமிமுதலியாரால்

இயற்றப்பட்டு.

ம-ா-ா-ஸ்ரீ பிடாரித்தாங்கல்
நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியார்

சகல சுதந்தரத்துடன் இன்னூலைப்
பெற்றுக்கொண்டு
தமது வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1903.

சென்னைபிரம்பூர் குயப்பேட்டை 65 வது, கெம்பர்வீதி.

உ

கடவுள்துணை.

விளம்பரம்.


சீர்மையிலிருந்து வரவழைக்கப்பட்ட

எங்களுடைய



ரோஜாப்பு மொட்டை

பரிட்சித்துப்பாருங்கள்



ரோஜாப்பு மொட்டு என்பது

ஒருஷோக்மோதிரம்.

இந்தமோதிரமானது அன்றுஅரும்பி இதழ்மலர்ந்த மொட்டை நடுவில் உடையதுபோல பிரகாசிக்கும் பார்வைக்கு மிக்கபகட்டாயும் சோபிதமாயுமிருக்கப்பட்ட 9-பேசலி ரவைகள்வைத்து இழைத்தது இது இங்லாண்டு கெமிகல்கோள்டு வென்னும் ஒருவித லோகத்தாற் செய்து விராகனிடை 8-ரூபா விலையுடைய சுபத்தங்கத்தினால் மேற்பூசலும் பூசப்பட்டது. இந்தமோதிரத்தில் எண்ணெபட்டாலும் ஜலம்பட்டாலும்பளபளப்பு மங்குகிறதில்லை கொஞ்சம் காந்தி குறைந்த போதிலும் சீமைசுண்ணாம்பு பூசிவைத்து புருஷினால் துடைத்து விட்டால் மறுபடியும் பிரகாசிக்கும் இந்தமோதிரத்திற்கும் ஜனங்கள் 2,000 ரூபாய் விலையிருக்குமேயென்று மதிப்பிடுவதற்கு அஞ்சமாட்டார்கள்.—இதன் விலை 2-ரூபாய்தான் வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

8-மோதிரத்திற்கு மல்பீஸ் இனாம்.

8-எட்டு மோதிரங்கள் ஒரேதடவையில் வாங்குவோருக்கு நாணயமானதாய் (ஒரு பீஸ் சலவைமல்) அதாவது 20-கெஜமுடையதான் இனாமாய் அனுப்பப்படும்.

4-மோதிரத்திற்கு இனாம்.

4-நாலு மோதிரம் ஒரேதடவையில் வாங்குவோருக்கு சரட்பட்டன் ஒருசெட்டு இனாமாய்அனுப்பப்படும்.

ஸ்ரீ பி. நா. தங்கவேலுமுதலியார்.
பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு மதறாஸ்.

உ

கடவுள் துணை.

மானிடக்குறியென்னும்

திரேகக்குறி-புருஷ லட்சணமென்றும்

வழங்கிய

அங்கக்குறிசாஸ்திரம்.

(-)

இஃது,

மணிமங்கலம்.

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

பிடாரித்தாங்கல்,

நாராயணசாமிமுதலியார் குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1907.

சென்னை பிரம்பூர் குயப்பேட்டை 65-வது-நெவீடு

ரிஜிஸ்டர்.

அறிவிப்பு.

இதனால் அச்சியந்திரசாலைத் தலைவர்கட்கும் புத்தக வியாபாரிகட்கும் தெரியப்படுத்துவது யாதெனில் சிறுமணலூர் - முனிசாமி முதலியாரால் நூதனமாக இயற்றிய அங்கக்குறி சாஸ்திர மென்னும் இந்நூலை சென்னை புரசை குயப்பேட்டை படவெட்டம்மன் கோவில்வீதி-64-வது நெம்பர் வீட்டிலிருக்கும் வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தலைவர்-ம-ள-ள-ஸ்ரீ, பி-நாராயணசாமி முதலியார் குமாரர்-பி-சிதம்பரமுதலியாராகிய யான் சகல சுதந்தரத்துடன்பெற்றுக்கொண்டு, மகாகனம்பொருந்திய கெவன்மெண்டாரது சட்டப்படி ரிஜிஸ்தர்காப்ரயிட்டு செய்திருக்கிறபடியால் என்னுடைய அனுமதியில்லாமல் யாதாமொருவர் அச்சிடுவாராகில்ஷெயாரது 189௵ 28-வது ஆக்டின் 20-வது பிரிவில்-6-வது விதியின்படி நேரிடும் நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகவும் பினல் கோர்ட்டாரவர்கள் கேள்விக்கு ஜவாபுதாரிகளாகவு மிருப்பார்களென்று யாவரும்தடையின்றி கவனிப்பீர்களாகவும்.

இப்படிக்கு,

பி-நா-சிதம்பரமுதலியார்.


ராகுகாலம்.		
வாரங்கள்.	மணிமுகூர்த்.	மணிவரை.
ஞா	௪½	௬
தி	௭½	௯
செ	௩	௪½
புத	௧௨	௧½
வி	௧½	௩
வெ	௰½	௧௨
சநி	௯	௰½

யாத்திரைப்பொருத்தம்
உத்தியோகப்பொருத்தம்
ஊர்ப்பொருத்தம்
இவை பார்க்கும்
நரசக்கரம்.

1
2
3
4
5

குளிககாலம்.		
வாரங்கள்	மணிமுகூர்த்	மணிவரை
ஞா	௩	௪½
தி	௧½	௩
செ	௧௨	௧½
பு	௰½	௧௨
வி	௯	௰½
வெ	௭½	௯
சநி	௬	௭½

நாமநக்ஷத்திரவெழுத்து	
சு-சே-சோ-ல	அசுவி
லி-லு-லே-லோ	பரணி
அ-இ-உ-எ	கார்த்
ஒ-வ-வி-வு	உரோ
வே-வோ-க-கி	மிருக
கு-க-ங-ச	ஆருத்
கே-கோ-ஹ-ஹி	புனர்பூ
ஹு-ஹே-ஹோ	பூசம்
டி-டு-டெ-டொ	ஆயிலி
ம-மி-மு-மே	மகம்
மோ-ட-டி-டு	பூரம்
டே-டொ-ப-பி	உத்திர
பு-ஷ-ண-ட	அஸ்த
பெ-பொ-ர-ரி	சித்தி



நாமநக்ஷத்திரவெழுத்து	
சுவாதி	ரு-ரே-ரோ-த
விசாக	தி-து-தே-தோ
அநுஷ	ந-நி-நு-நே
கேட்	நோ-ய-யி-யு
மூலம்	யே-யோ-ப-பி
பூராட	பு-த-ப-ட
உத்தி	பே-போ-ஜ-ஜி
ஸ்ரீரவ	கீ-கு-கெ-கொ
அவிட்	க-கீ-கு-கெ
சதயம்	கோ-ஸ-ஸீ-ஸு
பூரட்	ஸே-ஸோ-த-தி
உத்திர	து-த-ஜ-ஞ
இரேவ	தெ-தொ-ச-சி

அவரவர்கள் நினைத்த ஊர் அல்லது உத்தியோகம் இதுகளின் முதலெழுத்து எந்த நட்சத்திரத்தில் வருகிறதோ அந்தநட்சத்திரத்தை இந்தமனிதனுடைய சிரசின்மேலிருக்கும்-௧-வது, நெம்பராக பாவித்து யெண்ணிக்கொண்டுவந்தால் தன்னுடைய பேருக்கு முதலெழுத்துவரும் நட்சத்திரமானது மேலேயிருக்கும் (௫) நெம்பருக்குள்வந்தால்நன்று முகத்தில் (௬) கண்ணில் (௭) உதட்டில் (௮) இதுவும்மகாவுத்தமம்புஜம்(௨)ம்மார்பு(௨)ம் உத்தமம் வயறு(௫)ம்வெகுநன்மைகுய்யம் (௧) குதற்கம்-௧-காலில்-௬-ல்-இதுகளில் வந்தால் அது அலைச்சலும் துன்பமும் பிணியும் வியாகூலமுங் கொடுக்கும் ஆகாது யென்பதாம்.

ராசிச் சக்கரம்.

மீனம். 12	மேஷம் 1	ரிஷபம் 2	மிதுனம். 3
கும்பம். 11			கடகம். 4
மகரம். 10			சிங்கம். 5
தனுசு. 9	விருச்சிகம் 8	துலாம். 7	கன்னி. 6



தரையில் வட்டமாக மெழுகி இந்த சக்கரம்போல் விபூதியினால்போட்டு மஞ்சளால்பிள்ளையார்பிடித்துவைத்துநாலுவர்ண புஷ்பஞ்சூட்டி ஒருமஞ்சள்நிற புஷ்பத்தை சிறுவர்களிடம் கொடுத்து தொடச்சொல்லி அந்தலக்கப்பிரகாரம் சுபாசுபம் தெரிந்துக் கொள்ளவும்.



1 மேஷமாகிய ஆடுதோற்றினால் நினைத்தகாரியம்முடியாது
2 ரிஷபந்தோன்றினால் அரைபலன்கிடைக்கும்
3 மிதுனம்தோன்றினால் அரைபலன்கிடைக்கும்
4 கடகமானால் உனமனம்போல நிறைவேரும்
5 சிங்கமானால சத்துருக்கள்மேலிட்டிருக்குரார் முடியாது
6 கன்னியானால் உடனேஜெயமாகும்
7 துலாமானால் நாள்பட்டுதான் நிறைவேரும்
8 விருச்சிகமானால் அத்விஷபத்தில் கொஞ்சவிஷமிருக்கிறது
9 தனுசு நீ நினைத்தகாரியம் நம்பவேண்டாம்
10 மகரம் கொஞ்சநாள்பட்டு கைகூடும்
11 கும்பம் அஞ்சவேண்டியதில்லை வெகுசீக்கிரத்தில்முடியும்
12 மீனம் இந்தகாரியம் வீடுதேடிவரும்

இந்தசக்கரம்தொடச்சொல்லிபார்ப்பவர்களுக்கு தன்னுடையலக்கினமே தனக்குதோற்றினால்எந்தலக்கினமானாலும் பூரணபலன்கிடைத்தமாதிரி முடியும்.

உ

கடவுள் துணை.

மாநிடக்குறியென்றும்

திரேகக்குறியென்றும் புருஷலட்சணமென்றும்

வழங்குகின்ற

அங்கக்குறிசாத்திரம்.

விநாயகர் துதி-கலிவிருத்தம்.

நீரும்வெண்மணி நேருப்பரத்தினோர்
கூறிலோங்கும் குமரியருள்சுதன்
வாரணந்திகழ் வதனவள்ளலார்
காரணப்பதம் கைதொழுதேத்துவாம்.

நூன்முகம்.

காரணமாம் கைலாயக் கர்த்தாபோற்றி
சகனமொடு புவனமதை யீன்றாள்போற்றி
பூரணமாம் ஜெகச்சோதி பொருளேபோற்றி
புத்தியிலேநிர்த்தமிடும் சத்திபோற்றி
வாரணமா முகமுடைய வையாபோற்றி
வஞ்சியொடு மஞ்சையிலே வருவாய்போற்றி
தாரணியில் மானிடத்தின் குறியைச்சொல்ல
தந்தையொரு பதினெண்பேர் தாளேபோற்றி. க

போற்றியே மனிதரிட புதுமையெல்லாம்
புத்தியினாலாமட்டும் சேகரித்து
சாற்றுகிறேன் அறிவுடைய மானேகேளு
சமுசாரத்தில் வீழாதே மனதாய்நில்லு

காற்றிலே பகப்பட்ட துரும்பைப்போலே
கண்கலங்கி மனங்கலங்கி தடுமாறுதே
நேற்றிருந்தா ரின்றைக்கு வெண்ணீறானார்
நீயேது மலைபோலே வேர்கொள்வாயோ. ௨

வேர்கொண்டி ருப்பவர்கள் யாருமில்லை
விண்ணுடனே மண்கூட வெளியாய்ப்போகும்
பார்கொண்டு ஆண்டமன்னர் கோடாகோடி
பட்டணத்துவேந்தரிலே யார்காணின்றார்
நீர்கொண்டுபடிபளக்கும் சிவனும்சத்தி
நேர்கொண்ட பெரியோரே நிலைநிற்பார்கள்
கார்கொண்ட சிறுமணலூர் குடியாய்கொண்ட
காளைமுனி சாமிசொல்லைக் கைக்கொள்வாயே. ௩

முனிசாமி யென்றுக்கால் பெரியோனல்ல
முறைகள்பல சித்துவகைக் கற்றோனல்ல
தனியான சாஸ்திரங்கள் தெரிந்தோனல்ல
தன்னைத்தா னறிந்தமகா சித்தனல்ல
கனிபோலே நாதாக்கள் வைத்தநூலில்
கண்டபல தொண்டெடுத்துக் கோர்வையாக்கி
பனிபோலே அவரவர்கள் தெரிந்துக்கொள்ள
பக்குவமா யெழுதிவைத்த பாகம்பாரே. ௪

பாரப்பா மனிதருடல் பெண்ஜாணுகும்
பண்ணுமயன் தன்னெழுத்தே ரேகையாகும்
நேரப்பா அள்ளியிடும் நெற்றிமேலே
நின்றிருக்கும் மண்டையெழுத் தென்றேசொல்வார்
மாரப்பா மண்டையிலே யெழுத்துப்போட்டு
மயிராலே மறைத்ததாய் புலம்புவார்கள்
ஆரப்பா அவ்வெழுத்தைக் கண்டபேர்கள்
அரகராயிப்படியுங் கெடுவாருண்டோ. ௫

உண்டான அங்கத்தின் குறிகளெல்லாம்
ஒவ்வொன்றாய் சொல்லுகிறேன் வுண்மைகேளு
பண்டான ரிஷிகளப்பா பதினெண்பேர்கள்
பரத்தொளியைக் கண்டவர்கள் பன்னவாக்கு
திண்டாடி பொருவரையுங் கேழ்க்கவேண்டாம்
தெளியாத மானிடர்க்கே திரட்டிவைத்தோம்

கண்டாதி சூட்சமதை யறிந்தபேர்க்கு
கலியுகத்தி லின்னமொரு குருவுமுண்டோ. ௬

குருவேண்டா வித்தையிது கூறக்கேளு
குடிமியடா மனிதனுக்கு ஆறுசாணும்
அருமையடா கோடியிலே ஒருவனுக்கு
அரசனிட குறிகளிது வரையக்கேளு
திரமான கூந்தல்பனைப் போல்வளர்ந்து
தேடரிய மேகம்போல் கருத்துநின்றால்
சரியாக நூற்றிருப தாண்டேயாகும்
ஐ ஞ்குறைந்தால் நூறென்றுசாற்றலாமே.

(இ-ள்.) மானிடராகப் பிறந்தவர்களுக்கு குடிமியானது ஆறுஜாண்ணிகளமிருக்க வேண்டுமாம் ஆனால் அது அரசர்களினும் நூற்றிலொருவனுக்கு உண்டு அப்படி யிருக்குமானல் நூத்திரிருபது வயதென்று சொல்லலாம் ஒருஜாண் குறைந்திருக்குமாகில் நூறுவயதென்று சப்தரிஷி முதலான பதினெட்டு சித்தரும் சொல்லினர் எ-று. ௭

ஆமடா முனைவெடித்துக் கோரையாகி
அப்போதைக் கப்போதே சிக்குமாகில்
நாமடா வென்சொல்வோம் சுகமேயில்லை
நாடோடி மாடதுபோல் நடக்கையுள்ளான்
காமடா சுருள்பட்டு மொத்தமாயும்
கார்நிறத்தான் காமிவெகு காமியாகும்
போமடா மிருதுவாகத் துவளுமாகில்
புத்தியிலே மிக்கவனுப் புகலலாமே.

(இ-ள்.) குடுமியானது சற்றேரக்குறையங்களமாயிருந்தபோதிலும் முனைவெடித்தும் செம்பட்டை நிரம்பட்டும் சுருணைசுருணையாய் முருக்குபட்டிருக்குமாகில் ஒரு ஜீவனத்திலும் நிலைப்படமாட்டான் அதிகக் கருப்புநிறமாயும் சுருட்டைவடிவமாயும் யிருக்குமாகில் முறையில்லாத புணர்ச்சி செய்வான் அதாவது அதிக காமியா யிருப்பான்-எ-று. ௮

புத்தியுண்டாம் காதகண்டு நீண்டிருந்தால்
பொருளுள்ள புருடனடா சுகவானவான்
தெற்றியது நாலுவிரற் கடையேயானல்
[illegible] ரைகொள் போகியாவான்

சற்றேரக்குறைவாக யிருக்குமாகில்
  சமுசாரந் தனிலிருந்தே ஞானியாவான்
மற்றவன்றன் னெற்றியிலே வரைநால்கீற்று
  வழகுபெரு முன்கழுத்தில் வறைமூன்றாகில்.

(இ-ள்.) யாதொருமனிதனுக்கும் செவிகளானது அகண்டுநீண்டும் இருக்குமாகில் தளராத்திரவியம் பெற்றவனா யிருப்பான் நெத்தியானது தன்னையால் நாலுவிரற்கடை அகலமிருக்குமாகில்ஜீவநதிகள் முதலான கங்காதீர்த்தமாடுவான் தூரஸ்தலங்களுக்குபாத்திரை செய்வான் வேதாந்தகேழ்விகளிலும் சிரந்தயோகியாவான் அப்படி நாலுவிரற்கடை யல்லாது சற்றேயேறக்குறைய யிருக்குமாகில் இல்லறமாகிய சம்சாரத்திலிருந்தேஞானத்திலும் வகாரம்முதலானபோக்குகளில் பிரியமுள்ளவனா யிருப்பான்-எ-று. ௬

ஆகவேயிவ்விரண்டு குறியோனுக்கு
  அப்பனேசொன்னவிந்த ரேகையென்பார்
ஆகவே நாற்பத்தி யைந்துக்குள்ளே
  அவனலவோ தாரமது ரெண்டுகொள்வான்
நோகவே சோறூட்டி வளர்த்ததந்தை
  நோய்கொள்வான் நாற்பதிலே அடையாளங்கள்
சாகவேமாட்டான்நீ பயப்படாதே
  சார்பாக பின்னமொரு குறியுங்கேளு.

(இள்.) மேல்பாட்டில்கூறியபடி நெற்றியிலே நாலுவரையாய்கீற்றும் முன்கழுத்தில் மூன்றுகீற்றுவிழுந்து மடிப்பாகத் தோற்றுமாகில் அதைசொன்னவிந்துரேகையென்றுசொல்லுவார்கள் அந்தஅடையாளமுள்ளவன் நாற்பத்தியைந்து வயதுக்குள் இரண்டு தாரங்கட்டுவான் அவ்விதக்குறிபெற்றவனுக்கு நாற்பதாவதுவயதிலே அவனுடையதகப்பன் பிரமாதவியாதிக்குள்ளாவான் ஆகிலும்சாகமாட்டான் இன்னம் ஒருவிதக்குறிசொல்லுகிறேன்-எ-று. ௭

கேளடாநெற்றியிலே வறைமூன்றாகில்
  கெடியான வுட்கழுத்தில் வரைரெண்டாகில்
தோளடா மூதுகுவலப் புறத்திலப்பா
  தொக்தமுள்ள மருவொன்று தோற்றுமாகில்
ஆளடா வொருதாரம் வீணாய்ப்போகும்
  அப்பனே மறுதாரம நிலைக்கும்பாறு

மீண்டாமூன் றிருப தருபதுக்குள்
　　மேதினியில் விக்குரியோன் மீளாவென்னே.

(இ-ள்.) அவ்விதக்குறிதவறி நெற்றியிலே மூன்றுவரையும் உட்கழுத்தில் இரண்டுவரையும் இருக்குமாகில் இரண்டு திரத்துடன் செடுநாளைக்கிருப்பான் தோளாசியுவில் தபுஜத்திலகழுத்தில் கடுகுபோல் ஒருமருவுமிருக்குமாகில் அவனுக்குஆயுசு இறந்துபோகும் அப்படி இறந்துபோன யிந்த அடையாள முள்ளவன் அறுபதுவயதில் தானுமரணமடைவான்—எ-று. ௰௧

என்னவேநெற்றியிலே யிற்றிரண்டு
　　மிடதுபக்கம் நெற்றியிலே மங்குதோற்றில்
கண்ணெனவே மக்களொடு மனைவியானோர்
　　கலந்திருப்பார் மாபெரிய குடும்பமாகி
மண்ணென்ற பூமியிலே பொருளுந்தோற்று
　　மண்டலத்து வேந்தனும் பிரியனுவான்
பண்ணென்ற விக்குறிகள் பொய்யாதப்பா
　　பாண்டவர்கள்முன்பாட்டன் வியாசன்வாக்கே.

(இ-ள்.) நெற்றியிலே இரண்டுவரையும் இடதுபக்கம் நெற்றியிலேமங்குபோல ஒரு அடையாளமிருக்குமாகில் பெண்சாதி பிள்ளைபக்கங்கள் முதலானவருடன் பெரியகுடும்பமாக யிருப்பதுடன் பூமியில் சிலபுதையலு மெடுப்பான் அதிகாரமான வுத்தியோகமுஞ் செய்வான் இது பாண்டவர்கள் பாட்டனாகிய வியாசபகவான் சொன்னபடி பொய்யாது—எ-று. ௰௨

முன்னென்ற நெற்றியிலே வரையைந்தாகில்
　　மக்களாது தக்காது பொருளுஞ்சேதம்
பின்னென்ற புறங்கழுத்தில் மடிப்புதோன்றில்
　　பெரியதன வானுவான் பொய்யேசொல்லான்
கன்னமது சிரிக்கையிலே குழியுமாகில்
　　காமியடா பெண்ணாலே மடிவான்மட்டை
யென்னுனை யிந்தமொழி வெளியிடாதே
　　யிணங்காத மடையனுக்கு குறிசொல்லாதே.

(இ-ள்.) நெற்றியினிடமாக ஐந்துவரையிருக்குமாகில் அவனுக்குப்பிறந்த சந்ததிகள் யாதொன்றும் தக்காதாம் புறங்கழுத்தில்மூன்று மடிப்புதோற்றுமாகில் பெருத்த பணக்காரனுவான் ஆனால்பொய்சத்தியமுதலான அபாண்டங்களுக்கு அஞ்சமாட்டான் சிரிக்கு

ம்பொழுது கன்னமானது கத்திவெட்டுபோல் மடியுமாகில் அதிக காமியாயிருப்பான் காமத்தாலே மடிவான் இந்தகுறியை வெளியி டாதே—எ-று. ௰௩

மங்கொன்று மால்போலே வலதுபக்கம்
மறுவாகி லுங்கழுத்தி லிருக்குமாகில்
தொங்கவே மிளகுபோ லிருந்திட்டாலும்
தோற்றுகிற யோகமதைச் சொல்லக்கேளு
செங்கையிலே முப்பத்தி யாரண்டுக்குள்
கெண்டமது வந்துடனே மீள்வானப்பா
இங்கிதனைப் பொய்யென்று சொன்னமட்டி
யேராதபடுகுழிக்கி யாளாவானே.

(இ-ள்.) வலது பக்கம் கழுத்தில் யேதாகிலுமொரு அடையாள ம்போல மங்காகிலும் மருவாகிலும் இருக்குமாகில் மிளகுபோலவுரு ண்டைவடிவமாக வளர்ந்து தொங்கினாலும் அவனுக்கு முப்பத்தி யாராவதுவயதில் கெங்கையிலே ஒருகெண்டம்வந்து மீளுவான் இ தைபொய்யென்று சொன்னவன் நரகத்துக்காளாவான்—எ-று. ()

ஆளடா மனிதனிட நெற்றிமேலே
அப்பனே மூன்றுவரை தெளிவாய்ப்பட்டு
தோளான மார்புநேர் கழுத்தின்மேலே
தொங்கலுள்ள பெரியவரை தோற்றுமாகில்
மீளுவான் ஐந்தான வயதுக்குள்ளே
மேலிட்டு கெங்கையிலே கண்டம்பட்டு
வேளாவான் பின்னையொரு தோஷமில்லை
வெகுபணத்துக் குள்ளவனாய் மீருவானே.

(இ-ள்.) ஒருமனிதனுடைய நெற்றியின்மேல் மூன்றுவரையும் உ ட்கழுத்தில் ஒரேமடிப்பாக பெரியவரைதோற்றுமாகில் அவனுக்கு ஐந்தாவது வயதில்கெங்கையிலே ஒரு கெண்டம்வந்து மீளுவான் பிறகு ஒருதோஷமும் கிடையாது—எ-று. ௰௫

மீண்டவன்றன் யோகமது பின்னமுண்டு
மேல்பார்வை கொள்ளாதே கேளுகேளு
ஆண்டென்ற வயதுமுப்ப தாகுமுன்னே
ஐந்துபிள்ளைப் பெறுவான்கா ணுண்மூன்றாகும்
தாண்டியே நடைநடப்பான் தீரக்காரன்
தனலாபம் கொஞ்சமடா தரித்ரனல்ல
வேண்டியதை யனுப்பிவைப்பான் குறைவிராது
விண்ணரிய சத்தியமாய் விளம்புவேனே.

(இ-ள்.) முன்பாட்டினுரைத்த யோகக்காரனுக்கு முப்பதுவயது க்குள் ஐந்துபிள்ளையுண்டாகும் அதில் பெண்ணிரண்டு ஆண் மூன் றாகும் அவனுடைய அடையாளம் என்னவென்றால் தாண்டுகோலா ய்நடப்பான் அதிகபணக்காரனுமல்ல தரித்திரனுமல்ல வேண்டியசு கமெல்லாம் அனுபவிப்பான்—எ-று. ௰௬

விளம்பவே அடியிதழ்நான் பெருத்துநீண்டு
விதமாகத் தலைபெருத்து யிடதுபக்கம்
குளம்பவே மங்கொன்று தோற்றிக்கொஞ்சம்
குட்டையாள் கருத்தவனுங் குழிக்கண்ணாகில்
தளம்பவே கடனமூர்ந்தி முப்பதாண்டில்
தன்மனைவி பரிகொடுத்து தனிபோனலா
குளப்பவே யிக்குரிக ளுள்ளோனுக்கு
குழந்தையது பெண்ணொன்று மென்றுசொல்லே.

(இ-ள்.) அடியிதழ் பெருத்தும் நீண்டும் தலைபெருத்தும் இடது பக்கந்தோளில் மங்குலொன்று யிருக்குமாகில் குழிக்கண்ணாக யிருந் தாலும் குட்டையாளாகவும் கருத்தவனாகயிருக்கும் இந்தக்குறி யெ ல்லாமுள்ளவன் முப்பதுவயதுக்குள் சாத்தியப்படாத கடன்கார னாகி யிருப்பான் அவனுக்கு வொரே பெண்குழந்தை யிருக்கும் பெ ண்சாதி யிறந்துவிடுவாள்—எ-று. ௰௭

பெண்ணென்று கூறினபின் பின்னங்கேளு
பிடரியிட பக்கமொரு மறுவுகண்டால்
கண்ணெனவே பூப்பட்ட பிள்ளையொன்று
கதிர்போல மாநிறமாய் வளர்வானப்பா
அண்ணலே யிக்குரிக ளநேகமுண்டு
யாரறியப்போறார்க ளவனிமீது
விண்ணிலேமீனமதை யெண்ணினாலும்
வினையுடலாம் மனிதர்குறி வேணதுண்டே.

(இ-ள்.) பிடரிலே யிடதுபக்கம் ஒருமருவு வுள்ளவனுக்கு கண் ணில்பூப்பட்ட பிள்ளையொன்று பிறக்கும் அது மாநிறமாய் இரு க்கும் ஆகாயத்திலே யிருக்கிற நக்ஷத்திரத்தை எண்ணினாலும் பெ ண்ணலாம் வினைக்காரணமாய் பிறந்த இந்தமானிடர்கள் குறியைச் சொல்ல ஆறால்முடியும்—எ-று. ௰௮

மனிதனவ னெற்றிவறை யைந்தேயாகில்
மாளாமல்நூறாண்டு சரியாய்நிற்பான்

இனிதானநான்குவரை தோற்றுமாகில்
பெண்புதே வயதென்று இமையோர்சொல்வார்
அணியாக மூன்றுவரை காணுமாகில்
தொல்லுலகில் வயதறுப தென்றேசொல்லு
அணியாககீற்றிரண்டே தோற்றுமானால்
அவனியிலே நாற்பதென்று வரையலாமே.

(இ-ள்.) பாதொருமனிதனுக்கும் நெற்றியிலே ஐந்துவரையிருக்குமாகில் வயது சரியாயிருப்பான் நாலுவரையிருக்குமாகில் ௮௰ வயதிருப்பான் மூன்றுவரையிருக்குமாகில் ௬௰ வயதிருப்பான் இரண்டுகீற்றே தோற்றுமாகில் ௪௰ வயது இருப்பானென்று சொல்லலாம்—எ-று. ௰௯

வரையொன்றுங் காணாமல் சந்திரன்போல்
வளமாகநெற்றியது காந்திவீசி
சிவர்போல சிலநரம்பு மேலேதூக்கி
சர்ப்பமணியே சாரைப்போல் நீண்டிருந்தால்
தரையாளும் இராஜனுக்கு மந்த்ரியாவான்
தலைசிறுத்து கண்குவிழ்ந்தால் தரித்ரனாவான்
கறைபோலபுருவமது அகன்டிருந்தால்
கன்னியர்கள் மோகித்துக் கைக்கொள்வாரே.

(இ-ள்.) நெற்றியிலிடமாக பாதொருகீற்றுமடிப்புமொன்றுமில்லாமல் எட்டாம்பிறைச் சந்திரன்போல் காந்திவீசி வெவ்வர்ணமாயிருப்பதன்றி சிலநரம்புகள் தூக்கி சாரைப்பாம்புபோலோடியிருந்தால் அவனுக்குமந்திரியோகம் கிடைக்கும் அல்லது அதிகாரம் பொருந்திய பெரிய உத்தியோகமுள்ளவனாய் செங்கோல் செலுத்துவான் அந்த அடையாளமுள்ளவனுக்கே தலைபெருத்து அழகில்லாமலும் உள்ளடங்கிய குழிக்கண்ணுமாயிருப்பானாகில் மீளாத தரித்திரனாவான் அப்படியானாலும் புருவமானது வர்ணம்தீட்டியதுபோல் கருத்து பட்டையாக அகன்றிருக்குமாகில் ஸ்த்ரீகள் மோகித்து அவனுக்கு இவ்வசமாக மோகத்தைக் கொடுத்து கைக்கொள்வார்கள்—எ-று. ௨௰

கைக்கொள்வார் இருகண்ணும் அலரிபோலே
கடைக்கண்ணும் சிவந்திருந்தால் தனவானாவான்
மைப்பட்டு துடைத்தாப்போல் மாசிக்கண்ணை
மாபெரியவினைசெய்வான் மடையனப்பா

செப்பரிய மருமறுவாம் புள்ளிக்கண்ணன்
  செந்தமிழால் சிலதுகவி செய்வானப்பா
சைப்பட்ட தாமரைப்போல் பூர்த்தகண்ணன்
  கணக்கில்லா பொன்படைத்து சீமானுவான்.

(இ-ள்.) யாதொருவனுக்கு அலரிப்பூப்போலே கண்கள் பிரகாசித்தும் கடைக்கண் சிவந்திருந்தால் தக்க திரவியமுள்ளவனுய் சுகித்திருப்பான் மாசியாகிய மேகத்தைப்போன்ற அழுக்குக்கண்ணன் மூர்க்ககுணமுள்ளவனும் தரித்திரனுமாயிருப்பான் மலரினுள்ள அறும்பைப்போல சிறு முழிகளுள்ளவன் அல்லது குரிதிற்முள்ளகண்ணன் செந்தமிழாகிலும் சுயபாஷையில் சிலகவித்துவம் செய்வானும் கையினால் இதழ்களை பிரிக்கப்பட்ட தாமரைபோல் மலர்ந்து பிரகாசிக்கும் பெரியகண்களையுடையவன கணக்கில்லாத திரவியம்படைத்து சீமானுயிருப்பான்—எ-று. ௨௧

ஆகவே தாடையிலே சுழியொன்ருகில்
  அப்பனே ருஜனிட யோகமாகும்
ஆகவேதாடையிலே சுழிரெண்டாகில்
  அதிகாரத் தொழில்பெருவா னடக்கமாட்டான்
ஆகவே தாடையிலே சுழிமூன்ருகில்
  அவனுடைய வயதப்பா னுன்காம்பத்தில்
ஆகவே யோகமிலே பெருவானென்று
  அவனியிலே வியாசமுனி சொன்னதாமே.

(இ-ள்.) மனிதனது தாடையிலே ஒருசுழி யிருக்குமாகில் இராஜயோகமபெற்று சுகமாக வாழ்ந்திருப்பான் இரண்டுசுழியிருக்குமாகில் சூரத்தொழிலாகிய அதிகாரம் செலுத்துவான் மூன்றுசுழியிருக்குமாகில் அவனுக்கு நாற்பதுவயதில் அகஸ்மாத்தாய் ஒருபோகம் கிடைக்குமென்று வியாசமுனி சொன்னார்—எ-று. ௨௨

சொன்னதொரு வலதுபுஜம் மீதிலேதான்
  சுழியொன்று யிருந்தாக்கால யோகங்கேளு
பன்னதொரு தனவானுய் வாழ்வானப்பா
  பாவியடா விடதுபுஜம் மேலேயானுல்
தன்னுதொரு வலதுபக்கம சிரசுதொட்டு
  தலைதாங்கும் பாதமட்டும் அரிவாய்பாரு
மன்னதொரு வலம்புரியாய் சுழிகண்டாக்கால்
  மண்ணுலகி லுள்ளளவும் சுகமாயவாழ்வான்,

(இ-ள்.) ஆடவனது வலதுபுஜத்தின்மேல்சுழியிருக்குமாகில்கொஞ்சம் தனவானுக்வேயிருப்பான் இடதுபக்கம் புஜத்தில் சுழியிருந்தால் யெந்தஜீவனத்திலும் பாவியாகவேயிருப்பான் யாதொருவனுக்கும் சிரசிலிருந்து வலதுபக்கமேவலம்புரிசுழிகள் இருக்குமாகில் அதினால் பிரயோசனம் உண்டுயென்பார்கள் இடம்புரிச்சுழி புருஷர்களுக்கு ஆகாதாம்—எ-று. உ௧

வாழ்கவே முன்னோர்கள் வைத்தநூலை
வகையறிய மாட்டாத வையத்தோற்கு
தாழ்வின்றி சிறுமணலூர் முனிசாமித்தான்
தனித்தனியா யுள்ளதெல்லாம கோர்வையாக்கி
கேழ்வியொன்று மில்லாமல் தெரிந்துக்கொள்ள
வெணிதமெல்லாம் வெளிநடையாய் சொன்னேனப்பா
கிழ்நிமையாய் கண்ணடியில் மச்சங்கண்டால்
கிணற்றிலே புதையலொன்று யெடுப்பானப்பா.

(இ-ள்) முன்னோர்களால் சொல்லப்பட்ட பலபல்நூலையுங் கொண்டு சிறுமணலூர் முனிசாமியால் கோர்வையாக்கிய நூலுக்கு ஆசானில்லாமலே தெரிந்துகொள்ளலாம் கண்ணிமையிருக்கும் கீழ்இரப்பையின்மீது எந்தபுருடனுக்கு மச்சமிருக்கிறதோ அவன் கிணத்திலே திரவியங்கண்டெடுப்பான்—எ-று. உ௨

அப்பனே யின்னமொரு குறியுமுண்டு
அவனுடைய யிடதுநிமை துடிக்குமாகில்
செப்பியதோர் வலதுபக்க மச்சமொன்று
சிரப்பா மார்பினிலும் துடையிற்கொள்ளும்
அற்புதமாய் இக்குறிகள் இருக்குமாகில்
அவனுடைய வீடுவிட்டு வருஷம்போவான்
நற்பதியில் பெண்பிறந்து மாண்டுப்போகும்
நாளான பிறகுமொரு ஆணுண்டாமே.

(இ-ள்.) எந்த ஆடவருக்கும் இடதுபக்கம் புருவம் படபடென்று துடிக்குமாகில் அவனுடைய வலதுபக்கம் முகத்தில் மச்சமும் அல்லதுமார்பிலும் துடையுள்ளும் மச்சமிருக்குமாகில் அவனுடைய வீடுவிட்டு ஒருவருஷம் யாத்திரை செய்துவருவான் ஒரு பெண் குழந்தைபிறந்து யிறந்துபோகும் பிறகு ஆண்குழந்தை பிறந்து அதுதான் கடைசிவரையிலிருக்கும்—எ-று. உ௩

பிறவியடா மானிடமாய்ப் பிறந்தபேர்க்கு
பிலமான குறியொன்று சொல்லக்கேளு
அறைதனிலே துடைக்குள்ளே குறியின்மேலே
அவனவன்தன் வலதுபக்கம் மருவுகண்டால்
பிரவிமுதல்மாளவும் செல்வனாவான்
பொல்லாத வருமையடா இடதுபக்கம்
கறையான வலதுவிழி மேலேயானால்
கண்ணியனா யொருகுடிக்கி பெரியோனாவான்
பிரியான வலமுலைமேல் மச்சமானால்
பெருமாள்போல் பலவிதத்தும் பெரியோன்றானே.

(இ-ள்.) ஒவ்வொரு ஆடவருக்கும் அவரவர்கள் தொடைக்குள்ளேயாவது அறையிலாவது ஆண்குறி யென்னும் லிங்கத்தின்மேலேயாவது வலதுபக்கம் மருவுயிருக்குமாகில் வெகுசெல்வனா யிருப்பான் இந்தஇடங்களிற்றானே இடதுபக்கம் மருவுயிருக்குமாகில் வருமையுடையவனாயிருப்பான் வலதுகண்ணின்மேலே யிருக்குமாகில் அரசுக்குலத்துமையாகிய அதிகாரம் செய்வான் வலதுமுலைக்கண்ணின் மேலிருந்தால் மகாவிஷ்ணுவைப்போல் எந்த தொழிலிலும் சாமார்த்தியமுள்ள புருஷனாயிருப்பான்—எ-று. ௨௬

குமிழ்நீண்டு கண்சிவந்து புருவமேறில்
கோபியென் றேயுலகில் குறியுஞ்சொன்னோம்
தமிழுருமை யரிவன்மிக பொருளுஞ்சேர்ப்பான்
சாந்தமுள்ள பேற்குவெகு சாந்தனாவான்
குமிழ்பெருத்து கண்களது லச்சையானால்
கோலமடா அவன்பிழைப்பைக் கூறக்கேளு
அழிந்துபோம் ஒருதாரம் கிணத்தில்வீழ்ந்து
அவனியிலே மறுதாரங் கட்டுவானே.

(இ-ள்.) ஆண்பிள்ளையாகப்பிறந்த வொவ்வொருவருக்கும் நாசியானது நீண்டு கண்களானது சிவந்தும் யேர்புருவமாகியும் இருக்குமானால் எப்பொழுதும் கோபக்காரனென்று சொல்லலாம் அன்றியும் தமிழ்முதலானபாஷையில் ஊக்கமுள்ளவனாயிருப்பான் தளராத பணம்படைத்தவனும் நல்லவருக்கு நல்லவனையும் துஷ்டருக்கு துஷ்டனையு மிருப்பான் அப்படியல்லாது நாசியானது கனத்துகண்களானது பச்சையாக யிருக்குமானால் அவனுடையமுதல்தாரம் கிணத்தில்வீழ்ந்துயிரந்துபோகும்பிறகுயிரண்டாந்தாரம்கட்டுவான்-எ-று.

பல்வரிசை முத்துப்போ லழகுதோன்றில்
பசியாமல் ஜீவிப்பான குறைவிராது
சொல்லிய்வன் சிரிக்கையிலே மூதேவிப்போல்
களித்தமுக மானக்கால் தரித்திரனவான்
வில்லார்ந்த அரசனைப்போல் சிருக்கெற்றோன்
வெகுபணத்தைக் கொண்டுவியா பாரஞ்செய்வான்
அல்லாத அழுகைநகை யுள்ளோனப்பா
அடுத்தபிட்டை கூடத்தா னழியும்பாரே.

(இ-ள்.) பல்வரிசையானது முத்தைப்போல் பிரகாசிக்க சிரிக்கிற வன் குறைவில்லாத ஜீவனமும் அடுத்தவரை ஆதரிக்குஞ்சக்தியுள்ள வனுமிருப்பான் ஒருவன் சிரிக்கும்போது மூதேவிபோல் அழகில் லாமல் சிரித்தமுகமாயிருக்குமானால் தரித்திரமே யனுபவிப்பான் அ ல்லது இராசாக்களைப்போல் திருமாப்பான சிரிப்புசிரிக்கிறவன் வெ குபணமுள்ளவனும் பத்துபேருக்கு தலைவனுக வெகுவியாபாரம் செய்பவனுக்கவனுமிருப்பான் ஒருவன் சிரிக்கும்போது அழுகிற மு கத்தைப்போலிருக்குமானால் அவன் அடுத்தபிட்டைகூட தரித்திரம் மேலிட்டு அழிவடையுமென்று . . . . உ-அ

இனி கை ரேகையா:

சூத்திரம்.

கைவிரலாலைந்திணையுங் கையற்றினலே
கலந்தளந்துநீரிள பார்க்கக்கண்டு
செய்பவேர்ந்தற்கொண்டு தொட்டுவைத்தா
சிரசுகவிரல்சேர்ட்டிப்பாரு
ஐவிரலும் தாண்டிப்பு பிச்சபரனல்
அவனுடைய யோகமதை யுரைப்பதேனே
வையமிசை நூறுண்டும் குறைவில்லாமல்
வாழ்குவான் சிறிதையுடன் வாழ்வானப்பா.

(இ-ள்.) கையிலுள்ள ஐந்துவிரல்களையும் ஒருகயிற்றினால் அளந் . . . .

சமமாயும் அல்லது ஒருவரை குறைவாகயிருந்தபோதிலுஞ் சகல பந்துக்களுடன் கூடியசுகத்தோடு ஜீவிப்பான்—எ-று. ௨௯

முன்னளந்த படிகயற்றை யளந்துபார்க்கில்
முழங்கையி லிருந்துமணிக் கட்டுமட்டும்
தன்னையொட்டி யங்கையிலே நிற்குமாகில்
தரணிமிசை யனைவருக்கும் யேழையாவான்
பன்னவொரு துணையின்றி யொருவனாகி
பலவீடு மிரந்துண்ணும் பரியோனாவான்
பின்னமில்லை யிக்குறிகள் பொய்யாதப்பா
பின்புராணிச் சொல்லாத முனிநூலாமே.

(இ-ள்.) முன்னளந்தமாதிரியாகவே கயற்றையளந்துபார்க்கில் மணிக்கட்டுவரையில் வந்தாலும் உள்ளங்கையில் வந்தாலும் அவனுடைய மனைவிமக்கள் யாவுந்தோற்று ஒருதுணையு மில்லாமல் பிச்சையெடுத்து ஜீவனஞ்செய்வான்—எ-று. ௩௰

மாலைபோல் ஒருகயற்றை கழுத்திலிட்டு
மாரிரண்டின் முலைக்காம்புக் களந்துகொண்டு
சாலவே அவன்சிரசில் சுற்றிப்பார்க்க
சரியாக நின்றுக்கால் தனியோனாவான்
நூலதுவும் மிச்சமா யிருக்குமாகில்
நேரிழையாள் பிரியனடா நெரிங்கிவாழ்வான்
ஞாலமதி லொருநாளும் பிரியமாட்டான்
நம்பியே முனிவாக்கை நாட்டிற்சொல்லே.

(இ-ள்.) ஒருகயற்றையெடுத்து மாலைபோல் கழுத்தில்போட்டு இரண்டுமார்முனைக்கும் அளந்து அந்தக்கயற்றை நடுநெற்றிக்கு நேராய்காதைநீக்கலாக தலைபைச்சுற்றி யளந்துபார்த்தால் சரியாயிருக்குமானால் சம்சாரத்தில் பிரியமில்லாதவன் சிலகாலம்கலந்திருந்தாலும் சிலகாலம் பெண்சாதியை நீங்கியிருப்பான் அந்தக் கயரானது தலையைச்சுற்றியும் மிச்சப்படுமானால் ஸ்திரீகளுக்குமெத்தப்பிரியனாயிருப்பான் இவன்மீது ஸ்திரீயும் பிரியமாயிருப்பாள் ஒருநாளுந் தனியாயிருக்கமாட்டான் இதுபொய்யாகமாட்டாது சகலருக்கும் முனிவாக்கென்று சொல்லுவாய்—எ-று. ௩௧

இன்னமொரு கயரளவு சொல்லக்கேளு
யிதமாக ஐந்துவிரல் வளையம்போலே

சொன்னபடி நூலளந்துக் கொண்டதனைச்
சுற்றிப்பார் மணிக்கையில் சரியாய்நின்றால்
மன்னவனே யன்னுடைய திசையைக்கேளு
வாழ்மனையில் குறைவில்லை வருத்தமில்லை
அன்னவிதம் நூலளக்கக் குறையுமாகில்
அகலாத வறுமையென்பார் ஆதிநூலோர்.

(இ-ள்) ஐந்தளிரலையும் மோதிரம்போல் வளையமாக அளந்து அந்தக்கயற்றை மணிக்கையிற்சுற்றிப்பார்த்தால் அந்தக்கயரானது குறைந்தால் பொருள்நில்லாது மனிதருக்கும் பகைகாட்டும அல்லது கயறானது அதிகப்பட்டு மீதியாகுமாகில் பொருள்சேரும் பிள்ளைகளும்வுண்டு தன்சொல் மேன்மையாகும்—எ-று. ௩௨

தோளான விலெலும்பில் கயற்றைவைத்து
தோற்றமுடன் நீட்டிநடு விரலின்நீளம்
தாளதென் றேயொருவர் சொல்லாவண்ணஞ்
சரியாகக் கயரதனை யளந்துக்கொண்டு
நீளமது அதிற்ரெட்டை யாகச்சேர்த்து
நின்றவன்றன் காலடியில் முனையைவைத்து
சாலவவன் நெற்றியிலே மிகவாஞ்செல்வம்
சஞ்சலமில் லாதிருப்பான் வாய்மட்டுந்தான்.

(இ-ள்.) ஆண்பிள்ளையாகிய ஆடவர்களினது வலது தோளும் இல்லெலும்பின்மேல் கயற்றைவைத்து கைநீட்டி நடுவிரலின் நிகக்கண்ணுக்குச்சரியாய் அளந்து அதைரெட்டித்து அவர்களை நிற்கவைத்து காலடியில் ஒருமுனையைவைத்து மற்றவொருமுனையைப்பிடித்து மனிதனை அளக்கும்போது நெற்றிவரைக்கும் வந்தால் தொண்ணூறுவயதளவும் மிகசவுக்கியமாயிருப்பான் கண்புருவத்திற்குவந்தால் பெண்பதுவயதான் சமரசமான தாழ்வாயிருப்பான் மூக்கு அளவுக்கு வந்தால் சொஞ்சம் கோபமுள்ளவனையும் வாசனைதிரவியத்தில் பிரியமுள்ளவனுயுமிருப்பான் வாயளவுக்குவந்தால் அன்னத்துக்குமாத்திரம் குறைவில்லாதவனும் சொற்பஜீவனமுள்ளவனுயுமிருப்பான் அதற்கும் குறைவாக முகக்கட்டை முதலான அளவுக்கு குறைந்தால் தரித்திரனென்று தடையில்லாமல் சொல்லலாம்—எ-று. ௩௩

முன்னளந்தக் கயரதுதான் நெற்றிக்கேறில்
மொழிந்திட்டோம் வயதுதான் தொண்ணூறென்றே

பன்னவிரு புருவத்தில் வந்துநின்றால்
  பாமன்மேல் ஆணையடா எண்பதாகும்
பின்னிய மூக்களவு வந்துதானால்
  பேசினே னெழுபதின்மேல் பிழைக்கமாட்டான்
அன்னமுண்ணும் வாயளவில் வந்துநின்றால்
  அப்பனே அவன்வயது ஐம்பதாமே.

(இ-ள்.) முன்னளந்த கயிரானது நெற்றிக்கிவந்தால் தொண்ணூறுவயதும் புருவங்களுக்குவந்தால் எண்பதுவயதும் வாயின்மேலுதட்டுக்குவந்தால் அறுபத்தியைந்தும் கீழுதட்டுக்குவந்தால் அறுபதும் அந்தக்கயிரானது கழுத்தளவுக்குவந்தால் மிகவுக்கமும் வயதுஅன்பதாம் நெஞ்சுக்குழிக்கு சரியாய்நின்றால் முப்பதுவயதும் மார்பில்தானே நின்றுவிட்டால் இருபதுவயதென்று இயைபோர்களும் சொல்லுவார்கள்—எ-று. ௩௪

உந்தியது மாரளவுக் குள்ளடங்கி
  ஒருமடிப்பு தோற்றுவதே தரித்திரமாகும்
தந்நம்பால வயறுதான மிகவேதூக்கி
  தாராளமாய்மடிந்தால் தனவானாவான்
விந்தையாய் பாம்புபோல் வயறுசுருங்கி
  வெடுவெடுப்பா யுள்ளவனே வெகுளியாவான்
அந்தமற்று தடுக்குப்போல் வயறுள்ளாற்கு
  அதிகமடா யீரலபெருந் தீனிவகாரன.

(இ-ள்.) வயறானது மார்முனைக்கி சமமாகவும் ஒரேமடிப்பு விழுமாகில தரித்திரனுவான யானைவயற்றைப்போல பெருத்துஇருந்து அல்லது ஆறுமடிப்புவிழுமாகில மிகுந்தபணக்காரனுவான் பெரியவறுயிருந்தபோதிலும மடிப்பிலலாமலஇடதுபக்கஞ சுழியிருக்குமாகில் கொடியதரித்திரனுயிருப்பான பாம்பினவயற்றைப்போலவும பெருக்காமலும சிறுககாமலுமிருக்குமாகில வெகுளியாயிருப்பான் அதாவது சிலவுக்காரனுவான அந்தமில்லாதவன் தடுக்குப்போல் இருக்குமாகில பெருந்திண்டிக் காரனும மானயீன மில்லாதவனும் ஆவான அவனுக்கு ஈரலபெரிதாயிருக்குந்தீரமுள்ளவனுயிருப்பான்—எ-று.

வயறுமேல வலதுபக்கம மச்சமாகில்
  வெவ்வடமிழில சிலதுகவி வழுத்துவான்காண்
வயற்றினமுதல் மாரளவும நேரம்மாகி
  வளையுலக்கைப் போல்முனைந்தால் மானியாவான்

வயறுமுதல் மார்பளவும் ரோமமற்று
வனிதயர்போ லிருந்தாக்கால் வஞ்சனுவான்
வயற்றிலே வலம்புரியாய் சுழிகண்டாக்கால்
வாழ்னுளெல் லாம்சுகமாய் வாழ்வான்றானே.

(இ-ள்.) வயற்றினிடமாக வலதுபக்கம்மச்சமிருக்குமாகில் மிகசாமார்த்தியமுள்ளவனும் சுபபாஷையில் கவித்துவம் செய்பவனுமாயிருப்பான் வயர்முதல்மார்வரையும் புல்முளைத்ததுபோல்செகுட்சியாகரோமங்கள்வளர்ந்திருக்குமாகில் மிகவும் மானியாகயிருப்பான் அதாவது யோக்கியமென்பதாம் மார்முதலான விடங்களில் ரோமமேயில்லாமல் ஸ்திரீகளைப்போலிருக்குமாகில் வஞ்சகனும் கபடனும் சூதுக்காரனும் மோசக்கிரியுமாயிருப்பான் வயற்றினிடமாக வலதுபக்கம் வலம்புரிசுழி யிருக்குமாகில் அவனது வாழ்நாளாகிய ஆயிசுபரியந்தம் சுகமுடையவனும் பணக்காரனும் அதிகாரம் பெற்றவனுமா யிருப்பான்—எ-று. ௩௬

சுகமென்ற மனைவியொடு புணரும்போது
சூட்சமது தானறியுங் குறியைக்கேளு
அகமென்ற வீரியந்தான் சீக்கிரத்தில்
ஆணுக்கு தனக்ககன்றால் செல்வமுண்டாம்
பகடுபட்டுச் சின்னேரஞ் செல்லுமாகில்
பனிப்போலே துக்கமது வந்துமாறும்
இகமதிலே பொதுமடந்தை யானபோதும்
யிக்குறிகள் தப்பாது யிணங்கிப்பாறே.

(இ-ள்.) மாதொருஸ்திரீயைப் புணரும்போது வீரியமானது அம்மாதுக்கு சீக்கிரம் கலிதமாகும் பட்சத்தில் ஆடவனுக்கு செல்வம்பெருகுஞ் சற்றுநேரப்பமோகில் கொஞ்சம் துக்கமுள்ளவனு யிருப்பான்—எ-று. ௩௭

குறியென்ற வீரியந்தான் மல்லிகைப்போல்
குணமாக மணங்கொடுக்கில் தனவானுவான்
வறியென்ற சுண்ணும்பு நாற்றமாகில்
வையமிசை செல்வமது வளராதப்பா
தறியென்ற தேன்போலே வாசம்வீசில்
தைபலர்கள் பிரியன்வெகு சுகவானுவான்
பரியென்ற முனிவாக்கு பலவாரேது
பரிட்சிக்கத் தெரியுமடா பாரின்மீதே.

(இ-ள்.) வீரியம்வதிக்கும்போது மல்லிகைப்பூவாசம்வீசினால்சகல ஐஸ்வரியமுண்டாகி ஆண்பிள்ளைபெருவான்சுண்ணும்புநாற்றம் வீ

சினல் தரித்திரமாகுந் தேன்வாசனைவீசினல் மிகவுஞ் சவுக்கியமாயி ருப்பானென்று முனிநூலின் உண்மை பரிட்சித்தவனன்றி மற்றவ னுக்குபலகால்கூறியும் பயன்படா—எ-று. ௩அ

பாரென்ற வுலகத்தில் புருடர்க்கெல்லாம்
பகரக்கேள் சிறுநீர்தான் பெய்யும்போது
நீரென்ற வந்நீர்தான் வலமாயோடி
நீண்டமுப் புரிகயர்போல் சுழலுமாகில்
காரென்ற மேகம்போல் பணம்பெருத்து
கதித்தசமு சாரியதாய்க் காணவாழ்வான்
தீரென்ற யிடப்புறமா யோடுமாகில்
தரித்திரமே குடிகொள்ளும் தனம்நிற்காது
நீரென்ற ஜெலமலமும் ஒன்ருய்வந்தால்
நிலமீது வியாதிநெடு நாள்நீங்காது.

(இ-ள்.)ஒவ்வொருபுருஷருஞ்சிறுநீர்விடும்போது அந்நீரானது தன்வலப்புறமாகஓடி வலமபுரியாகவே சுழன்று முருக்காய் விழுந்தா ல் வெகுநன்மையுஞ் சுகபோகசவுக்கியமுஞ் செல்வமுங் குறையின் றியிருக்குமாகில் இடதுபுஜமாயோடில் தாழ்ந்தசவுக்கியமுந்தரித்தி ரமுமாயிருக்குமாம் ஜெலமும் மலமும் முன்பின் அல்லாது வொன் ருய்உதித்தால் வியாதியஸ்தராகவே நெடுநாள் துன்பத்துக் கிடமா கவேயிருப்பார்—எ-று. ௩௯

நீங்காத விரளெல்லாம் நெருங்கிப்பாதம்
நீண்டுவெகு அகலமதாய் பெருத்திருந்தால்
தாங்குகின்ற பாதமது செந்தாமரைப்போல்
தளதளப்பாய் மிகசிவந்து தழைத்துநின்ருல்
நீங்காத பொருள்படைத்த புருஷனுவான்
நடைக்குறிகி யடிக்குறிகி விரலுங்குன்றி
தேங்கியே விரல்முனை களைந்துமட்டுந்
தெரியாமல் மற்றதெல்லாந் திரைபோல்நின்ருல்
ஓங்கியே பொருளவற்கு நிற்காதையா
ஒன்றுசுக மொன்றுதுய ருரவாங்காணே.

(இ-ள்.) பாதத்தின்விரல்களானது ஒன்ருெடொன்று ஒத்துமை யாகநெருங்கியும் விரல் நீட்டமாயும் பாதம் அகண்டும் நீண்டும்உள் ளங்காலானது மிகவுஞ்சிவந்து மெதுவாயிருக்குமாகில் திரண்டசெ ல்வமுடையவனுயிருப்பான் விரல்கள் குட்டையாயும் உள்ளங்கால்

படியாமலும் அதிகமாம்புகள் மேலிட்டிருந்தாலும் பாதம்நடுவில்வி ஷம்போல்கருகிறம்ஒடியிருந்தாலும் மிகதரித்திரவானுயிரு பான் விரல்மாத்திரம் நீண்டிருந்தால் பிள்ளைகள் உள்ளவனுயுஞ் சுகதுக்கஞ் சமமாய்பெற்றவனுயுமிருப்பான்—எ-று. ௪௰

உரவான அங்கத்தின் குறிகளெல்லாம்
ஒருபோதும் பிரியாது நிழல்போற்சேரும்
அரிவான முதியோரே ஆதிகாண்பார்
அல்லாத மூடரெல்லாம் அலைந்தேமாள்வார்
பரமான ஞன்முகனுர் செய்தகூத்து
பாரிடத்தார் சூதென்று பழிக்கவேண்டாம்
திரமான யிக்குறிகள் தெறிந்துசொன்னால்
தெய்வமென் றேயுலகில் தெரிசிப்பாரே.

(இ-ள்)அகத்தினிடமாயுள்ள குறிகளானது தன்னைவிட்டு நீங்காது நிழலைப்போல்சேருமாம் அதாவது (பேரிளமையின்பம்பிணிமூப்புச்சாக்காடு இவையாரும் கருவிலமைப்பு)இதுஉண்மைபாகக்கொண்டு இக்காலத்தினது யேற்பாடென்று நூலைப்பழிக்கவேண்டாம் இத்தகுறிகளின் லட்சணங்களது ஆங்கிரிகம் உரைப்பாராகில்அவர்களைதெய்வமென்று தெரிசிப்பார்களாம்—எ-று. ௪௧

தேங்காய் சகுனம்.

—()—

{ ஏதாகிலும் ஒருகாரியத்திற்குப்போகும்போது விநாயகர் ஆலயத்தில் பரிசுத்தமாய்சென்று தூபதீபங்கொடுத்து தேங்காயுடைத்து நன்மைதீமையறியவும். }

முடிசிறத்து வட்டமிட்டால் திருவந்தெய்தும்
மூன்றிலொரு பங்குடைந்தால் அச்சம்தோஷம்
செடியவொரு ஐந்திலொன்று தலைபாச்செல்வம்
நேரம்போ டாருதுண்டு நிதானவாழ்வு

அடியதனுல் பொடிசரித்தால் ரத்னம்சேரும்
அடிதடங்கிரண்டுசமன் கண்டபூசை
அடியவர்கள் பிடரறுக்கும் அரனுர்மைந்தன்
ஐங்கரனுர் முன்தேங்காய் சகுனம்பாரே.

(இ-ள்.) கணபதிக்குமுன்பாக தேங்கா யுடைக்கும்போது அடிசிறுகதுவட்டவடிவமாக வுடைந்தால் லட்சுமிகடாக்ஷத்தால்பொன் வந்துசேரும் மூன்றில் ஒருபங்கு வுடைந்தால் நினைத்த காரியத்திற்கு அச்சயசொல்லும் அதாவது தோஷமா மென்பது ஐந்தில் ஒருபங்கு வுடைந்தால் துலையாதசெல்வம்பலிக்கும் ஆறுதுண்டாயுடையுமாகில் நிதானமானவாழ்வார் அடிக்கும்போது பல்லுபோல் சிலபொடிகள் தெரித்துவிடுமாகில் நவலோகத்தைச்சேர்ந்த ஆபரணம் சித்திக்கும் நிறைநிருத்ததுபோல் இரண்டு துண்டுஞ் சமமாய்உடையுமாகில் மனதில்நினைத்தகாரியம் உடனேகைகூடும் மற்றக்கவலையெல்லாம் நிவர்த்தியாகும் அவ்விதம் கணேசருக்குமுன்பாக சகுனம் பார்—எ-று ௪௨

ஆணிமுடி தானிரண்டு கூறதானுல்
அக்கினியால் பொருளுக்கு சேதமாகும்
பேணியதில் வோடுடனே தெரித்துவிழுந்தால்
பிணியாலே துன்பமடா பொருளுஞ்சேதம்
நீணியதோர் கண்தெரித்தால் மரணமாகும்
நீளமதாய் பிளந்துவிட்டால் நிலைவிட்டோட்டும்
தாணுவிலே தவரிவிட்டால் குடும்பநாசம்
தந்திமுகன் முன்தேங்காய் சகுனந்தானே.

(இ-ள்.) தேங்காயினது குடுமியாகிய முடியானது இரண்டுபங்காய் பிளந்துவிட்டால் அக்கினிபால்பொருள் சேதமாகும் வோட்டோடு தெரித்து விழுந்தால் வியாதியினுல்துன்பப்படுவதன்றிபொருள் நஷ்டமாகும் கண்கள்மாத்திரம்தெரித்து அப்புரம் விழுந்துவிடுமாகில் மரணம்வரும் பேர்பாதியாக நிகளவடிவில் பிளந்துவிட்டால் தன்னிருப்பிடம் விட்டுநீக்கிவிடும் அல்லது தேசாந்திரம்போக்கும் அடிபடாமலேதவறியோடிப்போகுமானுல்குடும்பநாசமாம்-எ-று.

தேங்காயின் சகுணமிது யிவ்வாராகும்
தேடியிதைக் கண்டதினுல் வெளிப்பாடாச்சு
பாங்கான யிச்சகுணந் தெரிந்தபேர்கள்
பாடிவைத்த துபகார மென்றேசொல்வார்

போக்காலத் தாலழியும் மூடரப்பா
பொய்யென்றும் புரட்டென்றும் புலம்புவார்கள்
நீங்காம லொருநெறியே பிடித்தபேற்கு
நெஞ்சமே சாட்சியது நிஜமாம்பாரே.

(இ-ள்.) இந்தத்தேங்காய் சகுணமானது கணித சாஸ்திரத்தின் மூலியமாய் தேடிக்கிடைத்தமையால் இவ்வளவு சுலபநடையில்வெளியாக்கமாயிற்று அச்சகுணம் தெரிந்துள்ள பெரியோர்களெல்லாம் ஒப்புக்கொள்வாரன்றி தள்ள மாட்டார்களாம் என்போல் அறிவற்றமூடரெல்லாம் பொய்யென்றும் புரட்டென்றும் கட்டுக்கதையென்றும், தட்டுகெட்டு தலைநாளைசீக்கிரம்தேடுவார்களாம்(எப்பொருள்யார்யார்வாய்க்கேழ்ப்பினும் அப்பொருள்மெய்ப்பொருள்காண்பதறிவு)என்னும் பழமொழியுணர்ந்த பக்குவத்தோரெல்லாம் ஒவ்வொன்றிலும் உண்மையிருக்குமெனவே நிலைபடுத்துவார்கள்-எ-று.

தெரிவதற்கு பொருளொன்றும் மறைப்பில்லாமல்
தீபத்தின் ஒளிபோலே தேசத்தோர்க்கு
சிறுமணவூர் முனிசாமி செய்தவின்னூல்
சிதம்பரவேள் சுதந்தரமாய் சேகரித்து
அறுமறையின் வித்யாரத்நாகர மெந்திரத்தில்
ஆதித்தன் போலங்கக் குறிகண்டோர்கள்
திருவருளின் செயல்பெற்று குணமும்பெற்று
தீர்க்காயி சாயென்றும் திகழ்வார்தானே.

(இ-ள்.) தீபப்பிரகாசம்போல் வெற்றியடையாய் சிறுமணவூர் முனிசாமிமுதலியாரால் யெழுதப்பட்ட இன்னூலை சகலசுதந்தரத்துடன் பி - கா - சிதம்பரமுதலியார் யென்பவர் பெற்றுக்கொண்டு தமது வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்தில் பதிப்பித்து சூரியனைப்போல்சகலவுலகமும் அரியும்படியாய் வெளியிட்டார் இன்னூலின் கருத்துணர்பவர்களும் அப்படியே சந்திரசூரியர்போல் தீர்க்காயுசாய் வாழ்ந்திருப்பார்கள்—எ-று. ௨௫

அங்கக்குறிசாஸ்திரம்

முற்றிற்று

கடவுள்துணை.

போஸ்டாபீசுக்குசெலுத்தும்

மருந்து பார்சல்களுக்கு

வி. பி. தபால் கூலி விபரம்.

சிலர் போஸ்ட்சார்ஜ் அதிகமா யிருக்கிற தென்று பயப்பட்டு சாமான்வாங்க அஞ்சுகிரார்கள், இப்போது இந்த நோட்டீசில் கண்டிருக்கும் ரேட்டுபிரகாரம் பார்த்துக் கொள்ளவும், இதில் குறைவு வித்தியாசம்கிடையாது.

20	ரூபாயெடையுள்ள பார்சலுக்கு	தபால்சார்ஜி		0	4	0
40	,,	,,	,,	0	6	0
80	,,	,,	,,	0	8	0
120	,,	,,	,,	0	10	0
160	,,	,,	,,	0	12	0
200	,,	,,	,,	0	14	0
240	,,	,,	,,	1	0	0
280	,,	,,	,,	1	2	0

{ இப்படியே 40-ரூபாயிடைகளுக்கு 2-அணா வீதம் பார்சலின் கனத்திற்குத் தக்கபடி தபால்சார்ஜி ஏற்படும். }

புஸ்தகபாக்கெட்டுகட்கு

வி. பி. தபால் கூலி விபரம்.

10	ரூபாயெடையுள்ள பாக்கெட்டுக்கு	தபால்சார்ஜி		0	0	6
20	,,	,,	,,	0	1	0
30	,,	,,	,,	0	1	6
40	,,	,,	,,	0	2	0
50	,,	,,	,,	0	2	6

☞ மேற்குறித்த வெடை எப்படியென்றால் பிரதி 10-ரூபா யெடைக்கு 6-பை வீதம் எத்தனை ரூபா யெடை ஆனபோதிலும் அந்ததபால் சார்ஜுடன் வி-பி. மணியார்டர் கமிஷன் அணா ஒன்று அதிகமாகும்.

☞ பி. நா. தங்கவேலுமுதலியார்.
பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்ட்டு. மதராஸ்.

உ

கடவுள் துணை.

விளம்பரம்.

கனவான்களே! சென்னை பிரம்பூர் குயப்பேட்டை படவெட்
டம்மன் கோவில் தெரு 64-வது நெம்பருடைய வித்தியாரத்தி
னாகர அச்சுக்கூடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வி-பி கம்பெனியில் தமி
ழ், தெலுங்கு, கிரந்தம், துலுக்குமுதலிய புஸ்தகங்களும் ஸ்மார்த்த
வைஷ்ணவர்களுக்கு வேண்டும் புஸ்தகங்களும் பால்யர்களுக்கு வே
ண்டும் காலேஜிப் புஸ்தகங்களும் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்
டும் ஆக்டுபுஸ்தகங்களும், இசுலாமானவர்களுக்கு வேண்டும் தமிழ்
எழுத்தில் துலுக்கு புஸ்தகங்களும், காவலர், பாவலர், நாவலர் யாவ
ருக்கும் வேண்டும் இலக்கணம், இலக்கியம், புராணம், கதை, அம்
மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, அந்தாதி, கலம்பகம், கோ
வை, தூது, வெண்பா, சதகம், கும்மியெனும் அனேகம் தினுசு
களும், அத்வைத சாஸ்திரமும், ஆறுமுகநாவலர் புஷ்பரத செட்டி
யார் சை-இரத்தினசெட்டியார் இவர்களுடைய அச்சுக்கூடங்களிற்
பதிப்பித்த உயர்ந்த புஸ்தகங்களும், வியாதிகள் சொஸ்தப்படும்படி
தக்க அவிழ்தங்களும், அவரவர் பேர்களுக்குத் தக்கதாய் ரொம்ப
வும் அழகான வேலைசெய்த றப்பர் சீல்களும், ஜெர்மன் சில்வரால்
செய்த நகைகளும், சாமான்களும், நல்ல வாசனைபொருந்தியதாயும்
நாள்படயிருந்தால் கெடாமலிருக்கும்படியாயும், உள்ள அத்தர் தினு
சுகளும், பூசு பில்லைகளும், வாசனை வத்திகளும் இவ்வகை ளெல்லாம்
தயாரா யிருப்பதால் வேண்டியவர்கள் அடியிற்கண்ட எனது மேல்
விலாசத்திற்கு எழுதினால் உடனே வி-பி தபாலில் அனுப்பக்கூடும்
என்னுடைய கேட்லாக்கு வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அ
னுப்பினால் அனுப்பப்படும்.

ஒவ்வொருவரும் எங்களுக்கு விஷயந் தெரியும்படி தெளிவா
ய் ஒவ்வொரு முறையினுந் தங்கள் பெயர் ஊர், இருப்பிடம், போ
ஸ்டாபீஸ், தாலுக்கா, ஜில்லா முதலியவைகளோடே விலாசத்தைக
ட்டாய மெழுதவேண்டும்.

வித்தியாரத்தினாகர அச்சுக்கூடத்தலைவர்

பெரம்பூர் போஸ்டு மதராஸ்.

☞ பி. நா. சிதம்பரமுதலியார்.